(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | STC.No.360/2022 |

புகார்தாரர் தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW –2

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் |
| த/பெ | : | தேவராஜன் |
| கிராமம் | : | குறிப்பன்குளம் |
| வட்டம் | : | ஆலங்குளம் |
| வயது | : | 45 |

**(எதிரி ஆஜர்)**

2025 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 04 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் இந்த வழக்கின் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, இராதாபுரம் கிளையில் கிளை மேலாளராக பணி செய்து வருகிறேன். சாட்சி சம்மனில் குறிப்பிட்ட பிச்சையா என்பவரின் சேமிப்பு கணக்கு எண். 029100710400114 மேற்படி கணக்கு 24.11.2020 ல் மேற்படி பிச்சையா என்பவரின் சேமிப்பு கணக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி சேமிப்பு கணக்கின் 01.11.2021 முதல் 01.05.2022 வரையிலான Statement of Accounts சமர்ப்பிக்க இயலாது. **மேற்படி வங்கி கணக்கு முடிக்கப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை சாசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) சாட்சி சம்மனில் குறிப்பிட்ட மற்றொரு கணக்கு எண். 02910050043330 மேற்படி கணக்கு கணபதி என்பவரின் சேமிப்பு கணக்கு ஆகும். அதன் **Statement of Accounts 01.11.2021 முதல் 01.05.2022 வரையில் சமர்ப்பிக்கிறேன். அது சா.சா. ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கணபதி அவரது வங்கி கணக்கில் இருந்து 02.12.2021 அன்று ரூ 5 லட்சம் பணமாக கணக்கில் இருந்து எடுத்துள்ளார். 23.02.2022 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையின் காசோலையை எங்கள் வங்கி மூலம் கலெக்சனுக்கு தாக்கல் செய்து அதே தினத்தில் திருப்பப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 23.02.2022 அன்று எங்கள் வங்கியில் பணம் இல்லாத காரணத்தினால் காசோலை எண். 720924 என்ற காசோலையானது கணபதி என்பவரின் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டு திருப்பப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : –

1) புகார்தாரர் 02.12.2021 அன்று ரூ 5 லட்சம் வங்கி கணக்கில் இருந்து பணமாக எடுத்துள்ளார். எந்த வகைக்காக பணம் எடுத்தார் என்று உங்கள் வங்கி கணக்கில் துலங்காது. புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே வங்கி பரிவர்த்தனை எதுவும் சா.சா.ஆ.2 ஆவணத்தில் துலங்காது.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.